[1983 ஜனவரி 31

பெட்ரோல் பங்குகளில், பெட்ரோல் மற்றும் டீசல் வழங்குகின்ற பம்புகளில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்கள்.

*வினா எண் 69—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

பெட்ரோல் பங்குகளில் உள்ள பெட்ரோல்' டீசல் வழங்குகின்ற மீட்டர்கள் முறையாக இயங்குன்றனவா வழங்கப்படுகின்ற பெட்ரோல், டீசல் அளவு சரியாக உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பெட்ரோல் பங்குகளில் உள்ள பெட்ரோல், டீசல் வழங்குகின்ற பம்புகள் முறையாக இயங்க அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது. பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்கள் சரி பார்க்கப்பட்டு 12 மாதங்களுக்கு ஒரு முறை தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்களால் முத்திரையிடப்படுகின்றன. மேலும் ஆய்வாளர்கள் திடீர் ஆய்வுகள் மேற்க்கொண்டு குறைகள் கண்டால் சரியான நடவடிக்கை எடுத்து கொண்டு வருகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பொதுப்படையான ஒரு பதிலைச் சொன்னார்கள். பதில் எப்படியிருந்த போதிலும் வழங்கப்படுகின்ற பெட்ரோல் அளவு பங்கிற்கு பங்கு குறைந்து இருப்பதாகவும், அதுமட்டுமல்லாது குறைவது ஒருபுறம் இருக்க வழங்கப்படுகின்ற பெட்ரோல், டீசல் ஆகியவற்றில மண்ணெண்ணெய் கலப்பதாகவும் அதை நானே அனுபவித்த காரணத்தால் சொல்கிறேன்—சொல்லப்படுகிறது. மோட்டார் வண்டிகளை பழுதுபார்க்க எடுத்துச்செல்கிறபோது மண்ணெண்ணெய் கலந்த காரணத்தால் பழுதுபார்க்கும் செலவு அதிகமாகும் என்று சொன்னதால் இந்த விவரம் தெரிகிறது. ஆகவே, இப்படி குறைவாக சப்ளை செய்வது ஒரு குற்றம், கலப்படம் செய்வது இரண்டாவது குற்றம் என்கிற வகையில் இதை அரசாங்கம் தீவிரமாகக் கண்காணித்து அப்படி செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை எடுத்து, தகுந்த தண்டனைகளை வழங்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவு, தரம் சரியல்ல என்பது சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. தக்க நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும் என்ற உத்தரவையும் அரசு பிறப்பித்து இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருப்பதால் இன்றைக்கு விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் டீசல் தேவைப்படுகிறது. இந்த டீசல் வழங்குவதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. இன்றைக்கு

1983 ஜனவரி 31]

இந்த டீசல் வழங்குவது என்பது உரியவர்களுக்குத் தேவையான அளவிற்குக் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில், சீரான முறை வகுத்து எந்தவிதமான புகாரும் இல்லாத வகையில் அதனை வினியோகிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய துறை இல்லையென்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்லவிழைகிறேன். டீசல் தற்போது கொடுப்பது மத்திய அரசு பொறுப்பில் இருக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய மூன்று நிறுவனங்களிடம் இருக்கின்றன. அவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை தனித்தனியாகப் பிரித்து, அதிலே அந்தந்தப் பகுதியின் தேவை என்ன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கேட்டறிந்து சப்ளை செய்து வருகிறார்கள்.

Diesel control order is not introduced in our State.

திரு. கோவைதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெட்ரோல், டீசல் வழங்குவதில் ஏற்படுமின்ற அளவு குறைவு, கலப்படம் தடுப்பதற்காக தமிழக அரசே, மத்திய அரசு நிர்வாகத்தில் உள்ள கார்ப்பரேஷன்களிடமிருந்து பெட்ரோலை வாங்கி, கிளைகளை அமைத்து சப்ளை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்ற நாம் டீசல் வினியோகம், பெட்ரோல் வினியோகம் ஆகியவற்றையும் மாநிலங்களுக்கு மத்திய அரசு தந்தால் நம்மைவிட மகிழ்ச்சி அடைவார்கள் யாரும் இருக்க முடியாது. மைய அரசோடு தொடர்பு கொண்டபோது, கூட்டுறவு அமைப்புகள் மூலமாக, குறிப்பிட்ட அளவிற்கு வினியோகம் தரப்படும் என்று சொல்லி, ஆரம்ப காலத்தில் தந்தார்கள். ஆனாலும் கடந்த இரண்டாண்டு காலமாக என்ன காரணமோ கூட்டுறவு அமைப்பின் மூலமாக அளிக்கப்பட்டு வந்த வினியோக முறையைப் படிப்படியாகக் குறைத்து, தனியாருக்குத் தர வேண்டும் என்ற முறையை மைய அரசு மேற்கொண்டு வருகிறது. இது சரியான முறையல்ல என்பதைக் கூட மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, வருஷத்திற்கு ஒரு தரம் தொழிலாளர் இலாகாவில் இருக்கும் அதிகாரிகள் சென்று பெட்ரோல் டீசல் பங்குகளை பரிசோதனை செய்து, சீல் போடுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி செய்த பிறகும் கூட அளவு குறைவு என்பது தொடர்ந்து நடைபெறுகிறது என்பது குறித்து அரசுக்கு ரிப்போர்ட் வந்து இருக்கிறதா? அப்படி நடக்கிறது என்பது உண்மை. ஆகவே, ஒரு மாதத்திற்கு ஒரு தரம் 'சர்ப்ரைஸ் செக்' நடத்துவதற்கும்

அளவு சரிப்பார்ப்பதற்கும், தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டால் சீல் போட்டு வருவதற்கும், அந்த விற்பனை சரியாகச் செய்யப் படுகிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கும், தனியான அதிகாரி களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா? தொழிலாளர் இலாக்காவில் இருக்கும் அதிகாரிகளுக்கு வேலைப்பளு அதிகம் இருப்பதால் அவர்களால் அந்தப் பணியைச் செய்ய முடிய வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவற்றில் உண்மை இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறைதான் திடீர் சோதனை நடத்தப்படுகிறது. மாநிலம் தழுவிய அளவில் 24–6–81 அன்று 352 பெட்ரோல் பங்குகளில் சோதனை நடத்திய 60 பங்குகளில் இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன. 250 எம். எல். வரை அவர்கள் எடுக்கிறார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 6–2–82 அன்று 316 இடங்களில் நடத்திய திடீர் சோதனைகளில் 36 இடங்களில் இந்தக் குறைபாடு அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. திடீர் சோதனை அவ்வப்போது மாதத்திற்கு ஒரு முறை நடத்தவேண்டும் என்பது நல்ல யோசனை. குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு முறை நடத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் தொழிலாளர் நல இலாகாவில் உள்ள அதிகாரிகளுக்கு வேலை பளு என்பது உண்மை தான். அதிகாரிகளின் எண்ணிக்கையைச் சற்று அதிகரிக்கவேண்டும் என்பதில் கூட அரசு பரிசிலனை செய்ய இருக்கிறது. அது மட்டுமல்ல எடை, அளவு சம்பந்தமாக உள்ள பிரிவுகளில் கூட அதிகாரிகள் எண்ணிக்கையைச் சற்று உயர்ந்த அரசு பரிசிலனை செய்யும்.

(முற்பகல் 9–40)

திரு. மு. ப. முனுசாமி: தலைவரவர்களே, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய்—இந்த மூன்றையும் ஒருவரே விற்பனை செய்யும் உரிமை பெற்றிப்பதால்தான் அவர்களுக்கு கலப்படம் செய்வதற்கு வசதியாக இருக்கிறது. எனவே இவற்றைப் பிரித்து தனித்தனியாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவரவர் களே, மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு இது.